## வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு – 2011

வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளபடியான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த காலப்பகுதிக்கான வருமான செலவினக் கணக்கு மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கமளித்தல் தகல்வல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்படி நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். உயர் கணக்காய்வு நிறுவனத்தின் சர்வதேச கணக்காய்வு நியமங்களைப் (ISSAI 1000 – 1810) பின்பற்றி இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றியகணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவினை தாபித்தல்

2011 இன் 23 ஆம் இலக்க வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் 2 ஆம் பந்திக்கு அமைய எவையேனும் வரிக் கட்டணம் அல்லது அறவீடுகளை விதித்தல் மற்றும் தொடர்புடைய விடயங்கள் சம்பந்தமான சகல மேன்முறையீடுகளையும் விசாரணை செய்யும் பொறுப்பினை ஒப்படைத்து 2011 ஏப்ரல் 23 ஆந் திகதி வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு தாபிக்கப்பட்டது.

## 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம்

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 01 இற்கு அமைய 2011 மே மாதம் முதல் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த காலப்பகுதிக்காக காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெயர் பலகையொன்றை கொள்வனவு செய்தமைக்காக செலுத்தப்பட வேண்டிய ரூபா 106,243 செலவினம் கணக்குகளிலிருந்து விடுபட்டிருந்தது.

(ஆ) வாடகை அடிப்படையில் பெறப்பட்டிருந்த கட்டிடத்திற்காக செலுத்தப்பட்ட ரூபா 3,105,000 பாதுகாப்பு பிணை வைப்பு ஆண்டிற்குரிய செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் கணக்காய்வுக் கட்டணத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2011 ஆம் ஆண்டில் வரி முறைப்பாடுகளிற்காக கிடைத்திருந்த ரூபா 1,329,648,907 கூட்டுத்தொகையான காசு / பிணைமுறிகள் தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தல்கள் செய்யப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கு ஆணைக்குழுவுக்குத் தேவையான நிதி பொதுத் திறைசேரியினால் குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் வழங்கப்பட்டிருந்தது. அதற்கமைய, குறித்த காலப்பகுதிக்காக ரூபா 39,892,249 நிதி ஏற்பாடு கிடைத்திருந்ததுடன், அதிலிருந்து ரூபா 21,934,401 செலவிடப்பட்டதன் பின்னர் ரூபா 17,957,848 மிகையொன்று ஏற்பட்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 இயக்கச் செயற்பாடுகள்

2011 ஆம் ஆண்டில் தீர்வுகளிற்காக உள்நாட்டு இறைவரி திணைக்களத்திடமிருந்து ஆணைக்குழுவிற்கு 76 வரி மேன்முறையீடுகள் கிடைத்திருந்ததுடன் அந்த மேன்முறையீடுகளின் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 5,703,137,132 ஆகும். அத்துடன், 2011 ஏப்ரல் 23 ஆந் திகதியிலிருந்து செயற்பட்டிருந்த வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவிற்கு நேரடியாக 36 முறைப்பாடுகள் 2011 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் கிடைத்திருந்தன. அவற்றில் ரூபா 4,663,158,312 பெறுமதியான 28 மேன்முறையீடுகள் புலனாய்வு நடவடிக்கைகளிற்காக கையேற்கப்பட்டிருந்ததுடன், 8 மேன்முறையீடுகள் நிராகரிக்கப்பட்டிருந்தன. இருப்பினும், 2012 பெப்ரவரி 15 ஆந் திகதி வரை எந்தவொரு முறைப்பாடு தொடர்பிலும் புலனாய்வு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்காமையால் வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு தாபிக்கப்பட்டதன் நோக்கம் 2011 ஆம் ஆண்டில் நிறைவேறியிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

ஏறத்தாழ 13,500 சதுர அடிகள் கொண்ட கட்டிடமொன்றை 2011 மே 20 ஆந் திகதி முதல் வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்காக தனியார் கம்பனியொன்றுடன் ஆணைக்குழு உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டிருந்ததுடன் அதற்காக மீளாய்வாண்டில் ரூபா 22,064,450 செலுத்தப்பட்டிருந்தது.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையின் 2.14.1 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் ரூபா 50,000,000 பெறுமதிக்குக் கூடுதலான கொள்வனவு நடவடிக்கைகளின் போது அமைச்சு கொள்வனவுச் சபையினால் தீர்மானம் எடுக்கப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக நிறுவனத்திற்காக கட்டிடமொன்றை வாடகைக்குப் பெறுகையில் கொள்வனவு வழிகாட்டல்களிலிருந்து விலகி நிறுவனமொன்று தெரிவுசெய்யப்பட்டு விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திடமிருந்து விலை மதிப்பீட்டு அறிக்கையொன்றை பெற்றுக்கொள்ளாது ரூபா 55,890,000 பெறுமதிக்கு 3 ஆண்டுகளிற்காக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது.

(ii) இக் கட்டிடத்தின் கீழ் மாடியில் இழப்பீட்டு ஆணைக்குழுவிற்குச் சொந்தமான அலுவலகமொன்று காணப்பட்டதுடன் முழு கட்டிடத்திற்கும் ஒரு மின் மானியும் நீர் மானியும் காணப்படுகின்றமையால் இழப்பீட்டு ஆணைக்குழுவின் நீர் மற்றும் மின்சார நுகர்வுச் செலவினமும் வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவினால் செலுத்தப்பட்டிருந்தது.

(iii) கட்டிடத்தின் சதுர பரப்பளவை ஆணைக்குழுவில் பணிபுரிகின்ற 18 பதவியணியினருடன் ஒப்பிடுகையில் வருடமொன்றுக்கு ஒரு ஊழியருக்காக ரூபா 1,035,000 வாடகை காணப்பட்டது. அதற்கமைய, பதவியணியினருடன் ஒப்பிடுகையில் கட்டிடத்தின் இட வசதி குறைப்பயன்பாட்டில் காணப்பட்டது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்கள சுற்றுநிருபத்தின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியாண்டு முடிவுற்று 60 நாட்களிற்குள் குறித் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2011 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2015 யூலை 17 ஆந் திகதியன்றே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) 2007 ஒக்தோபர் 02 ஆந் திகதிய பீஈடீ/45 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்குகளைச் சமர்ப்பிக்கும் பொறுப்பு தொடர்பான சான்றுறுதி நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

### 5.2 கூட்டிணைந்த திட்டம், செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் கொள்வனவுத் திட்டம்

மீளாய்வுக் காலப்பகுதிக்காக கூட்டிணைந்த திட்டம், செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் கொள்வனவுத் திட்டம் என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

ஆணைக்குழுவினால் மீளாய்வுக் காலப்பகுதிக்காக பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது ஆணைக்குழுவின் செயலாளரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் | அவதானிப்பு |
|---|---|
| (அ) நிலையான சொத்துக்களின் கட்டுப்பாடு | நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிராமை மற்றும் வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்தப்பட்டிராமை |
| (ஆ) செயற்பாட்டுக் கட்டுப்பாடு | வைப்புக்கள் தொடர்பாக போதியளவில் அறிக்கைகள் பேணப்பட்டிராமை மற்றும் மேன்முறையீடுகள் முடிவடையும் வரை வைப்புக்கள் காலநீடிப்புச் செய்யப்பட்டிராமை |